# சிது சியாரோங் (Jiarong, Situ)




**Population:**
161,550 (2000)
199,550 (2010)
245,800 (2020)
**Countries:** China
**Buddhism:** Tibetan
**Christians:** 2

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Eastern Jiarong, Eastern Jyarung, Gyarong, Gyarung, Rgyarong, Chiarong, Jarong, Chiajung, Situ

**மக்கள்தொகை:** 139,000 in China (1993, Lin Xiangron)

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, தன்குத்-ஷியாங், சியாரோங் மொழி

**மொழி வழக்குகள்:** 4 (Lixian, Jinchuan, Xiaojin, Barkam)

**திபெத்திய புத்தமதம்:** 90%

**கிறிஸ்துவம்:** 0.01%

**வேதாகமம்:** இல்லை

**இயேசு திரைப்படம்:** இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு** : JIR

### கிறிஸ்துவத்தின் நிலை




- சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள்
- சுவிசேஷத்தைக் கேட்டும் இரட்சிக்கப்படாதவர்கள்
- ஏதாவது ஒரு கிறிஸ்துவப் பிரிவைப் பின்பற்றுபவர்கள்

**வசிப்பிடம்:** கி.பி 1993 ல் செய்யப்பட்ட ஓர் ஆய்வு மேற்கு சீனாவின் சிசுவான் மாநிலத்தில் 1,39,000 சிது மக்கள் இருப்பதாகக் காட்டுகிறது. சிது சியாரோங் பிரிவே சீனாவின் சியாரோங் இனங்களின் மத்தியில் ஆதிக்கம் வகிக்கிற பிரிவாகும். சிது மக்கள் கிழக்கத்திய சியாரோங் என்றும் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் மத்திய சிசுவான் மாநிலத்தின் லி (Li), ஷியாவ்சின் (Xiaojin), வென்சுஅன் (Wenchuan) மாவட்டங்களிலும், பர்கம் (Barkam) , சின்சுஅன் (Jinchuan) மாவட்டங்களின் சில பகுதிகளிலும் வசிக்கின்றனர். அநேக சிது மக்கள் செகு (Zhegu) மலைகளில் உருவாகும் சாகுனாவ் (Zagunao) நதி மற்றும் மின் நதியின் மேல் பகுதிக்கு இடையேயுள்ள ஒரு வி (V) வடிவ பள்ளத்தாக்கில் வசிக்கின்றனர்.

**அடையாளம்:** சிது என்ற பெயர் சியாரோங் நாட்டின் சுவோகசி (Zhuokeji) , ஸ்வோமோ (Suomo), சொங்காங் (Songgang), தங்பா (Dangba) என்கிற நான்கு குலங்களின் பாரம்பரிய வசிப்பிடத்தின் பெயராகும். இப்பெயரே இவர்கள் பேசும் மொழியைக் குறிக்க அதிகமாகப் பயன்படுத்தப்பட்டபடியால் இதுவே இனப் பெயராகவும்ஏற்றுக்கொள்ளப்பட்டது. சியாரோங் பிரிவுகள் சீனாவில் அதிகாரப்பூர்வமாக திபெத்தியர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. சியாரோங்களோ தனித்தன்மையான மொழியைப் பேசுகின்றனர் மற்றும் தாங்கள் இனத்திலும் வரலாற்றிலும் திபெத்தியர்களைக் காட்டிலும் வித்தியாசமானவர்கள் என நம்புகின்றனர்.

**மொழி:** சியாரோங் மொழியை வகைப் பிரிப்பது சீன அறிஞர்களைக் குழப்பமடையச் செய்துள்ளது. ஓர் அறிஞர் இவ்வாறு கூறுகிறார் “ சிசுவான் மாநிலத்தின் ஏபா மற்றும் கர்செ (Garze) பகுதிகளில் வசிக்கும் சியாரோங் மக்களின் மொழி ஒரு புதிராகும். இவர்கள் மொழி இலக்கணத்தில் திபெத்திய மொழியிலிருந்து வேறுபடுகிறது மற்றும் சியங் மற்றும் பூமி (Pumi) மொழிகளோடு ஒத்துப்போகிறது.” இவை திபெத்திய மற்றும் பர்மிய மொழிகளுக்கிடையிலான “மொழிப் பாலம்” எனக் கருதப்படுகின்றன. ஐந்து சியாரோங் மொழிகளுக்கிடையிலான வித்தியாசம் அதிகம்.

**வரலாறு:** கி.பி. 1949 வரைக்கும் சியாரோங் மக்கள் 18 சிறிய ராஜ்யங்களாகப் பிரிந்திருந்தனர். இவர்கள் 18 ஆம் நூற்றாண்டில் சீன இராணுவத்தைப் பத்துவருடங்கள்வரை நெருங்கமுடியாத நிலையில் வைத்திருந்தனர்.

**பழக்கவழக்கங்கள்:** இந்நாள்களில் பெரும்பாலான சியாரோங் மக்கள் விவசாயிகள் ஆவார்கள், கால்நடை வளர்ப்பதிலும் மத்திய சிசுவான் மாநிலத்தின் நதியோரங்களில் பயிர் சாகுபடி செய்வதிலும் ஈடுபடுகின்றனர். பட்டணங்களில் வசிக்கும் சில சியாரோங் மக்கள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

**மதம்:** பெரும்பாலான சியாரோங் மக்கள் திபெத்திய புத்தமதத்தைச் சேர்ந்தவர்கள்;




இருந்தும் அநேகர் சியங் மக்களின் பல தெய்வ வழிபாட்டு முறைகளையும் பின்பற்றுகின்றனர்.

**கிறிஸ்துவம்:** கிறிஸ்துவத்தைப் பற்றிச் சிலருக்கு மட்டுமே தெரியும். ஓர் ஆவணம் இவ்வாறு கூறுகிறது “மற்ற திபெத்திய இனங்களைக் காட்டிலும் சியாரோங் மக்கள் சீனர்களிடம் குறைந்த பகைமை உடையவர்கள். சீன மற்றும் திபெத்திய பகுதிகளுக்கிடையில் இவர்கள் வாழ்வதால், இவர்களைச் சீனர்கள் சுவிசேஷத்தோடு சந்திக்க ஏற்ற இடத்தில் உள்ளனர்.” சியாரோங் மக்களுக்கு, முதன் முதலாகக் கி.பி 1900 களில் யா-அன்னில் (Ya-an) பணித் தளத்தைக் கொண்டிருந்த அமெரிக்கன் பாப்டிஸ்ட்கள் மூலமும் மற்றும் கி.பி. 1910 களில் தி பார்டர் மிஷன் ஆப் தி சர்ச் ஆப் கிறிஸ்ட் இன் சைனா மூலமும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. இவர்களது முயற்சியை ஓர் எழுத்தாளர் இவ்வாறு சுருக்கமாகக் கூறுகிறார் “இந்த நூற்றாண்டின் முற்பாதியில் சியாரோங் மக்களுக்கு அருகாமையில் தங்கியிருந்த சில மிஷனெரிகள் இவர்கள் வாழும் பகுதிக்குச் சில பயணங்களை மேற்கொண்டனர். இந்தப் பயணங்கள் சில கைப்பிரதிகளை மொழிபெயர்க்க வழிவகுத்தது; ஆனாலும் கி.பி. 1930 ல் சியாரோங் மொழியை விசேஷமாகக் கற்கும் மற்றும் ஆய்வு செய்யும் பணி ஆரம்பிக்கும் வரை வேறெந்தப் பணியும் செய்யப்படவில்லை. கி.பி. 1936 ல் சிகப்பு இராணுவம் தாக்குதல் செய்தபோது யோனா புத்தகத்தின் ஆரம்ப மொழிபெயர்ப்பு நடந்துகொண்டிருந்தது ஆனால் யுத்தத்தில் எல்லா ஆவணங்களும் அழிந்தன.” இந்நாள்களில் வெறும் இரண்டு சியாரோங் விசுவாசிகள் மட்டுமே உள்ளனர். இவர்களே மிகப்பெரிய அறுவடையின் முதற்பலன்களாக இருக்கட்டும்!